கண்ணம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை : திரு.பா.பாஸ்கரன்

நி.மு.எண்.232/2024 நாள்: 29.05.2024

பொருள்:- மனைப்பிரிவு அங்கீகாரம் – கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் கண்ணம்பாளையம் பேரூராட்சி – க.ச. எண். 81/3B2B,81/4A2, 81/4A3,81/4B2,82/3B2,82/4A&82/4B-ல் 5774.00 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள நிலத்தினை மனைப்பிரிவு அமைக்க அனுமதி பெறப்பட்டது – மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவுவழங்குதல்தொடர்பாக.

பார்வை:- 1). நகர் ஊரமைப்புத்துறை இணைஇயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். CLPA/9LEMVQNN/2022/TCP.நாள். 13.03.2023
2). திரு.ஜி.பி.சேரலாதன், கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்பம் நாள். 27.12.2023.
3). கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்றத்தீர்மானம் எண்.115/2023, நாள்.29.12.2023.
4). கண்ணம்பாளையம் பேரூராட்சி செலுத்துச்சீட்டு எண். 217/2024-25. நாள்.29.05.2024.

கோயம்புத்தூர் மாவட்டம் , கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட க.ச. எண். 81/3B2B,81/4A2, 81/4A3,81/4B2,82/3B2,82/4A&82/4B-ல் 5774.00 சதுர மீட்ட பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1ல் காணும் நகர் ஊரமைத்துத் துறை இணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி 126/2023 என எண்ணிடப்பட்ட திட்ட அனுமதி, மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு (1 முதல் 6 வரை, சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 5 வரை மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 13 வரை) மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, பார்வை 2ல் காணும் விண்ணப்பதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் பெறப்பட்டதற்கு மன்ற ஒப்புதல் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து, பார்வை 3ல் காணும் விவரப்படி கண்ணம்பாளையம் பேரூராட்சி மன்றத்தில், மேற்படி கோவை உள்ளூர் திட்டக்குழும அனுமதி பெறப்பட்ட மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை, பார்வை 4ல் காணும் இவ்வலுவலக செலுத்துச்சீட்டின்படி தொகை ரூ.92534.00 செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கண்ணம்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட க.ச.எண். 81/3B2B,81/4A2, 81/4A3,81/4B2,82/3B2,82/4A&82/4B-ல் 5774.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அங்கீகாரம் பெறப்பட்டமனைப்பிரிவுவரைபடநகல்மனையிடத்தில்பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியும் வகையில்6 X 4 அளவுள்ள நிரந்தர அறிவிப்பு பலகைவைக்கப்படல்வேண்டும்.

2. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யும் பொருட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரயம் செய்யப்படும்பொழுது , கிரயப்பத்திரத்தின் ஒரு அங்கமாக வரைபடநகலையும் இணைத்து கிரயம் செய்துகொடுக்கப்படவேண்டும்.

3. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யப்படும்பொழுது காலிமனையிடவரி செலுத்தியது குறித்த விவரம் கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

4. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள மனைகள் விற்பனை செய்யப்படும்வரை மனை உரிமையாளரால் காலிமனைவரி ஆறு மாதகாலத்திற்கு ஒருமுறை பேரூராட்சியில் செலுத்தப்படவேண்டும். மேலும் விற்பனைசெய்யப்பட்டபின்பு இம்மனையில் கட்டிடம் கட்டும் வரையில் ஆறு மாதகாலத்திற்கு ஒருமுறை பேரூராட்சி அலுவலகத்தில் காலிமனைவரி செலுத்தப்படவேண்டும் எனவும் மனை உரிமையாளருக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

5. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளபடியே மனைகள் விற்கப்படவேண்டும். விதிமுறைகளுக்கு முரணாக ஒருமனையிடத்தை பகுதியாக பிரித்து விற்பனைசெய்யக் கூடாது.

6. இம்மனைப்பிரிவில் தெருவிளக்கு மற்றும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி முதலான அபிவிருத்திப்பணிகள் மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்படவேண்டும்.

7. இம்மனைப்பிரிவில் மனுதாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் மனைப்பிரிவு உரிமையாளர் நிபந்தனைகள் ஏதும் இன்றி தனது சொந்த செலவில்லெ சய்து கொடுக்கப்படவேண்டும்.

8. இம்மனைப்பிரிவில் ஒருமாத காலத்திற்குள் மின் கம்பங்கள் அமைக்க மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தி அதன் விவரம் பேரூராட்சிக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

29.5.2019

செயல் அலுவலர்
கண்ணம்பாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர்.

29/5/19

பெறுதல்:

திரு. ஜி.பி.சேரலாதன்
3/159சி, கோரித்தோட்டம்,
கரவழி மாதப்பூர்,
கோயம்புத்தூர் - 641 668.

நகல் :

1). உறுப்பினர் செயலார்(பொறுப்பு) , கோவை உள்ளூர் திட்டக்குழுமம் கோவை–18 அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

2). சார்பதிவாளர், சூலூர் சார்பதிவாளர் அலுவலகம் ,சூலூர். பத்திரப்பதிவு மேற்கொள்ளும்பொருட்டு தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.